Registered as a NewsPaper

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 8

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | சித்திரை –12 | 24–04–2004 | சனிக்கிழமை | ஓசை –66



உங்கள் அனைத்து தேவைகளுக்கும்

R.V. பந்தல் சேவை

முல்லைசாலை
தருமபுரம்.

விநாயகர் வீதி,
மயிலிட்டி.

# நோர்வேயை மீண்டும் ஏற்பாட்டாளராக செயற்படுமாறு சனாதிபதி சந்திரிகா அழைப்பு!

## புலிகளும் அழைக்க வேண்டும் என்கிறது நோர்வே

**விடுதலைப்புலிகளுக்கும் சிறிலங்கா அரசாங்கத்திற்கும் இடையிலான பேச்சு வார்த்தைகளில் மூன்றாம் தரப்பு ஏற்பாட்டா ளராக நோர்வே மீண்டும் செயற்பட வேண்டும் எனச் சனாதிபதிசந்திரிகா குமாரதுங்க நோர்வேயிடம் கேட்டுள்ளார்.இதேவேளை இதற்கு பதிலளித்த நோர்வேப் பிரதமர் விடுதலைப்புலிகளும் இதே மாதிரியான வேண்டு கோளை விடுக்கும் பட்சத்தில் ஏற்பாட்டாளராகப் பணியாற்றத் தாம் தயார் எனத் தெரிவித்துள்ளார்.**



நேற்று முன்தினம் நோர்வேப் பிரதமரைத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்ட சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஏற்பாட்டாளராகப்பணியாற்றுமாறு கோரிக்கையைமுன்வைத்ததாக நோர்வேப் பிரதமர் அலுவலகம் நேற்று அறிவித்தது.

மேற்படி பேச்சுவார்த்தை கடந்த நவம்பர் மாதம் இடைநிறுத்தப்பட்டமை தெரிந்ததே.

தங்களது மத்தியஸ்த்தத்தை நோர்வே விலக்கிக்கொண்ட போதும் யுத்தநிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் பணி விலக்கிக்கொள்ளப்படாது செயற்பட அனுமதித்தது.

ஏப்ரல் 2ந்தேதி இடம்பெற்ற பொதுத்தேர்தல் பிரச்சாரத்தில் இரு பிரதான கட்சிகளும் மீண்டும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அமைதி முயற்சி நன்கு செயற்படுவதற்காகவே நோர்வேயை சந்திரிகா முன்பு விமர்சித்தாராம்

### -சனாதிபதி செயலக அதிகாரி ஹரீம்பீரிஸ்

நாட்டில் அமைதிவழிமுறை நன்கு செயற்படவேண்டும் என்பதற்காகவே சனாதிபதி சந்திரிகா நோர்வே அரசின் மீது பல விமர்சனங்களை முன்வைத்தார் என சனாதிபதியின் செயலக அதிகாரி ஹரீம் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸிக்கு அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

கேள்வி:- நோர்வே நாட்டின் மீது முன்னர் சனாதிபதி பல் வேறு விமர்சனங்களைக் கூறி னார். குறிப்பாக புலிகளுக்கு சார்பாக அவர்கள் செயற்பட்டார்கள் என்கின்ற விமர்சனங்களை முன்வைத்தார். இப்போது மீண்டும் நோர்வேயை அதே பணிக்கு அழைத்துள்ளீர்கள் அவர்களிடம் ஏதாயினும் முன்நிபந்தனைகளை இதற்காக விதித்துள்ளீர்களா?

பதில்:- இவ்வேளையில் முன்பு கூறிய விமர்சனங்கள் பற்றி நாங்கள் ஏதும் பேசவிரும்பவில்லை. முன்பு நோர்வே மேற்கொண்ட அனுசரணைகள் பற்றி சனாதிபதி கூறியவை குறிப்பிட்ட பிரச்சினைகள், குறிப்பிட்ட விமர்சனங்கள் அவையனைத்தும்

(8ஆம் பக்கம் பார்க்க)

## பனையுடன் உந்துருளி மோதியது முரசுமோட்டையில் ஒருவர் பலி

வேகமாக வந்த உந்துருளி வீதியின் அருகில் உள்ள பனையுடன் மோதுண்டு ஒருவர் பலியாகியுள்ளார்.

மேற்படி சம்பவம் நேற்றைய தினம் முற்பகல் 2.30மணியளவில் முரசுமோட்டை செல்லையா கடைச் சந்தியில் இடம்பெற்றுள்ளது. சம்பவத்தில் உயிரிழந்தவர் முரசுமோட்டையைச் சேர்ந்த நமசிவாயம் நடேசமூர்த்தி என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தை ஆவார்.

மேற்படி நபர் முரசுமோட்டையில் இருந்து பரந்தன் நோக்கி

(8ஆம் பக்கம் பார்க்க)

## விசுவமடுவில் வீடு தீக்கிரை

விசுவமடு கிழக்கு பாரதிபுரத்தில் வீடு ஒன்று இனந்தெரியாதோரால் தீக்கிரைக்கயாக்கப்பட்டுள்ளது.

நேற்றுஇடம் பெற்ற இச்சம்பவத்தில் வெள்ளைச்சாமி சித்திரா என்பவருடைய வீடே இனந்தெரியாதோரால் எரிக்கப்பட்டது இதில் முக்கிய ஆவணங்கள் வீட்டுத்தளபாடங்கள் பொருட்கள் என்பன எரிந்துள்ளன.

## வடமேல் மாகாணசபைத் தேர்தல் ஏற்பாடுகள் யாவும் பூர்த்தி

(கொழும்பு)

திட்டமிட்டவாறு வடமேல் மாகாணசபைத் தேர்தல் இன்று நடைபெறுகின்றது.

இந்தத் தேர்தல் தொடர்பாக பப்ரல் எனப்படும் சுதந்திரமானதும் நீதியானதுமான மக்கள் செயற்பாட்டு அமைப்பு மேற்கொள்ளவுள்ள சகல பணிகளும் நிறைவடைந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தலின் மூலம் புத்தளம் மற்றும் குருநாகல் மாவட்டங்களைச் சேர்ந்த ஐம்பது உறுப்பினர்கள் வடமேல் மாகாணசபைக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இந்தத் தேர்தலில் 12 பிரதான அரசியல் கட்சிகளையும் 7 சுயேட்சைக் குழுக்களையும் சேர்ந்த 784 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை இப்பகுதிகளுக்கான தெரிவத்தாட்சி அதிகாரிகள் தங்கள் பணிகள் யாவும் பூர்த்தி

(8ஆம் பக்கம் பார்க்க)

## ஜனதாச பீரிஸ் தனது பா.உ. பதவியை ராஜினாமா

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் தேசியப்பட்டியல் மூலம் பாராளுமன்றம் சென்ற ஜனதாசபீரிஸ் தமது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவின் முன்னாள் ஊடகத் துறைப் பணிப்பாளரான இவர் முன்னணியின் வேண்டுகோளின் படியே தமது பாராளுமன்றப் பதவியை ராஜினாமாச் செய்த இவர் இன்று முதல் லேக்ஹவுஸ்

(8ஆம் பக்கம் பார்க்க)

## அம்பாறை கூட்டமைப்பு பா.உ.வின் காரைதீவு அலுவலகம் தீக்கிரை

(அம்பாறை)

அம்பாறை மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் செ.பத்மநாதனின் காரை தீவு அலுவலகம் இனந் தெரியாதோரால் தீக்கரையாக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன் அன்று இரவு 10.30 மணிக்கு மேற்படி சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதன்போது அலுவலகத்தில் இருந்த ஆவணங்கள் அனைத்தும் எரிந்து சாம்பராகியதுடன் அலுவல

(8ஆம் பக்கம் பார்க்க)

## சங்கரி பெற்ற தடை உத்தரவை ரத்துச் செய்யுமாறு கோரிக்கை

### இரா. சம்பந்தன் மனுத்தாக்கல்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ ஆனந்தசங்கரியினால் பெற்றுக்கொள்ளப்பட்ட தடை உத்தரவை ரத்துச் செய்யக் கோரி அந்தக்கட்சியின் செயலர்,இரா. சம்பந்தன் கிரேஷ்ட உபதலைவர் ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோர் நேற்று உயர் நீதிமன்றில் மனுத்தாக்கல் செய் துள்ளார்கள் தேர்தலுக்கு முன்னர்தமிழர்விடுதலைக் கூட்டணியின் செயற்பாட்டுக்கு ஆனந்தசங்கரி தடைஉத்தரவைப் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (32)

## தர்மராஜ்யம் எனக்கூறி ரணிலை ஆதரிக்கும் ஹெல உறுமயவை தோற்கடிக்க வேண்டும்

### ஐ.ம.சு.மு. பா.உ.விமல் வீரவன்ச சீற்றம்

(கொழும்பு)

தர்மராஜ்யம் எனக் கூறி இறுதியில் ரணில் விக்கிரமசிங்கவைப் பகிரங்கமாக ஆதரித்துள்ள ஜாதிக ஹெல உறுமயவைத் தோற்கடிக்க வேண்டுமென ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிப் பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு கூறுகையில், ஜாதிக ஹெல உறுமயவைச் சேர்ந்த இரண்டு பேரைக் கடத்திச் சென்றுள்ளதாகக் கூறப்படுகின்ற குற்றச்சாட்டு அடிப்படையற்றது.



ஈழத்திற்கும்,தர்மராஜ்யத்திற்கும், மலை நாட்டிற்கும் விருப்பமான ஒரு சிங்கள பௌத்தராகவே லொக்கு பண்டார விளங்குகின்

(8ஆம் பக்கம் பார்க்க)

## இரு பிக்குகளை கடத்தியதிற்கு அரசு மன்னிப்புக் கோரும்வரை ஆதரவில்லை

### -ஜாதிக ஹெல உறுமய அறிவிப்பு

(கொழும்பு)

தமது கட்சியின் இரண்டு பிக்குகளையும் கடத்திச் சென்றமை தொடர்பில் தம்மிடம் மன்னிப்புக் கோரும்வரை ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணி அரசாங்கத்துக்கு ஆதரவு அளிக்கப் போவதில்லை என ஜாதிக ஹெலஉறுமய தெரிவித்துள்ளது.

காணாமல்ப் போனதாகக் கூறப்பட்ட இரண்டு பிக்குகளில் அத்துலரத்னசீல தேரர் சனாதிபதியின் போக்குவரத்து ஆலோசகரின் வாகனத்திலேயே நேற்று முன்தினம் நாடாளுமன்றத்திற்கு வந்தார். கப்பாராஹே புன்னியாருந்ததேரர் ஜே.வி.பி. வாகனம் ஒன்றில் நாடாளுமன்றம் வந்தார்.

இவர்கள் இருவரும் காணாமல்ப் போனமை தொடர்பில் தாம் சனாதிபதியுடனும், பிரதமருடனும் ஐந்து தடவைக்கு மேல் பேசியபோதும் அவர்கள் உரிய பதிலை வழங்கவில்லை. இந்த நிலையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சம்பவம் குறித்து ஐ.ம.சுதந்திர முன்னணி முதல் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என ஹெலஉறுமயவின் அத்

(8ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தவறிவிட்டது

கணவதிப்பிள்ளை கோபப் பெருந்தேவி என்பவருடைய அ.அட்டை தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் செல்வி உதிரிகள் வாணிபம் என்னும் இடத்தில் கொடுக்கவும் அ.நம்பர் 568163966V (4463)

### புதிய பிரிவு ஆரம்பம்

ஆதவன் கல்விநிலையம் கிளிநொச்சி A/L 2006 கலை வர்த்தகம் புதிய பிரிவு ஆரம்பம்-24-04-2004 சனிகாலை 8மணி நிர்வாகி. (4454)

### இடம்மாற்றம்

ஸ்கந்தபுரத்தில் இயங்கி வந்த பிக்பென்ஸ் (வாணிபுத்தகசாலை) டிப்போ வீதி வன்னியன் தொலைத் தொடர்பு நிலையத்துக்கு அருகாமையில் இயங்கிவருகின்றது. என்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றேன். (9454)

### கருத்தரங்கு

உயிரியல் கருத்தரங்கு காலம் 2004.04.24 காலை 10 மணி ஆசிரியர் எஸ்.தவநேசன். இடம்: கேம்பிறிச் கல்லூரி பேருந்து நிலைய வீதி கிளிநொச்சி.நிர்வாகி(சி.9382)

### அதிபர்கள் ஆசிரியர்களுக்கு

தங்கள் பாடசாலைகளுக்குத் தேவையான தரம் 1முதல் 11வரையான வகுப்புகளுக்குரிய கணிப்பீட்டுப் புத்தகங்களை குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம் குமரன்ஸ் புத்தகசாலை புதுக்குடியிருப்பு. (4081)



## வருடாந்த பெருந் திருவிழா



திருவருள்மிகு இரணைமடு கனகாம்பிகை அம்பாள் பெருங்கோவில் வருடாந்த பெருந்திருவிழா 25.04.2004 ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெற திருவருள் கூடியுள்ளது

**இக்காலங்களில் அன்னையைத் தரிசித்து அருள்பெற்றுயேக வேண்டுகின்றோம்.**

அறங்காவலர்சபை,
இரணைமடு.

(சி-9386)

---

*TR TECH நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில் நுட்ப கல்வி நிறுவனம் நடாத்தும் AAT கற்கை நெறிக்கான*

## விண்ணப்பம் கோரல்

*தேசிய ரீதியில் அங்கீகாரமுடைய சான்றிதழ்களுடனான AAT கற்கை நெறிக்கான விண்ணப்பங்கள் தகைமையுடையவர்களிடமிருந்து கோரப்படுகின்றன.*

*தகைமை:–*

*க.பொ.த(உ/த) 3 பாடங்களில் சித்தி*

AAT *கற்க ஆர்வமுள்ளவர்கள் எதிர்வரும் 30.04.2004ற்கு முன்னர் விண்ணப்பிக்கலாம்.*

அதிபர்,
தொழில் நுட்பக்கல்வி நிறுவனம்,
கிளிநொச்சி.

(4459)

---

## இலண்டன் TR TECH நிறுவன அனுசரணையுடன் கிளிநொச்சி தொழில்நுட்பகல்வி நிறுவனம் நடாத்தும் ஆங்கில பயிற்சிநெறிக்கான விண்ணப்பம் கோரல்

இலண்டனில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட உயர்கல்வி நிறுவனத்தின் சான்றிதழ்களுடன் கூடிய பின்வரும் பயிற்சி நெறிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஆங்கிலம் கற்பித்தலிற்கான டிப்ளோமா சான்றிதழ்.
**(Diploma in English Teaching)**

**தகைமைகள்**

1. க. பொ.த(சா/த) ஆங்கிலப்பாடத்தில் திறமைச் சித்தி அத்துடன்
2. க.பொ.த(உ/த) 3பாடத்தில் சித்தி.

குறிப்பு:- நவீன இலத்திரனியல் உபகரணங்கள் மற்றும் நவீன நூலக வசதிகளுடன் கூடியதும் பல்கலைக்கழக விரிவுரையாளர்களும், பிரித்தானியாவிலிருந்து வருகை தரும் விரிவுரையாளர்களும் விரிவுரையாற்றுவர்.

விரிவுரைகள் 30.04.2004 காலை 10.00 மணிக்கு கிளிநொச்சி தொழில்நுட்ப கல்வி நிறுவனத்தில் ஆரம்பமாகவுள்ளதால் தகைமையுடையவர்கள் அன்றைய தினம் உரிய சான்றிதழ்களுடன் நேரில் சமூகம் தரவும்.

**அதிபர்,**
தொழில்நுட்ப கல்வி நிறுவனம்
கிளிநொச்சி.

(4458)

---

## நெஞ்சில் நிழலாடும் நினைவுகளுடன் 4ஆம் ஆண்டில்...

**தாயின் மடியில்**
24
12
1971



**தாயக மண்ணில்**
24
04
2001

## லெப்.கேணல். சுதந்திரா/செங்கதிர்

### யேசுதாஸன் மரியமைந்தினி

### கற்கோவளம் பருத்தித்துறை

சுதந்திர விடியலுக்காய் சிறகுகள் விரித்தாள்
சுதந்திரக்காற்றை முகர்ந்திட எழுந்தாள்
ஆயிரம் கனவுகள் நெஞ்சினில் சுமந்தாள்
ஆணைகள் முடித்திட தீச்சுவாலையில் நிமிர்ந்தாள்
உயிர் என்றும் மண்ணுக்கே என்றாய் - அந்த
உயிரினை ஊற்றியே தீயினை அணைத்தாள்
மலர்ந்திடும் ஈழத்தின் உரம் நாங்களே என்றவள்
மண்ணில் சரிந்திடும் கணத்திலும் தமிழீழமே என்றாள்.

உந்தன் நினைவில்...
குடும்பத்தினர்,
தம்பி மன்றவாணன்
சக போராளிகள்.

(4444)

---

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத்திட்டம் (CAARP)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது

### கடன் இலக்கம்–2043–ஸ்ரீ (எஸ்.எவ்)

மன்னார் மாவட்டத்தில் சமூக மீள்அமைப்பு உபதிட்டத்தை அமுல் படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜி.ஓ) விருப்பு வெளிப்பாடு பற்றி அழைப்பு.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைப்பதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கும் உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்கத் திணைக்களத்தின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்டவெளிக்கள உத்தியோகத்தர்கள், அரசசார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல் படுத்தப்படும் இந்த சமூகஅபிவிருத்தி உபதிட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும் இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், அமுல்நடத்துவதிலும் இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பலகிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

ஆரம்பகட்டமான பின்வரும் கிராமங்களில் இனம்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார் படுத்துவதற்கும் வழங்களை ஒன்றுபடுத்துவதற்கும் நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு கிழக்கில் திட்டங்களைச் செயற்படுத்தும் தகுதி வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| மாவட்டம் | கிராமங்கள் | பிரதேசசெயலாளர்/ உதவிஅரசாங்க அதிபர் பிரிவு |
|---|---|---|
| மன்னார் | 01. பெரியகமம் | மன்னார் |
| | 02. இராசமடு | நானாட்டான் |
| | 03. கொக்குப்புடையான் | முசலி |
| | 04. சின்னப்பண்டிவிரிச்சான் | மடு |
| | 05. இலுப்பைக்கடவை | மாந்தை மேற்கு |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இதுபற்றிய மேலதிக விபரங்களை வேலைநாட்களில் காலை 9.00மணி தொடக்கம் மாலை 3.30மணிவரை மாவட்ட செயலர்/அரசாங்க அதிபரிடமிருந்து (மன்னார் மாவட்டம் தொலைபேசி-023/2233103, தொலைநகரி-023/2233103, மின்அஞ்சல் distmnr @ sltnelk) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல்நடத்த விரும்பும் தகுதி வாய்ந்தஅரசார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத்தெரிவை மாவட்ட செயலருக்கு/அரசாங்கஅதிபருக்கு 06.05.2004 மாலை 3.00மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும் பொழுது பின்வரும் விபரங்களைஅது உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள் நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம் சட்டரீதியான பதிவுசெய்த விபரங்கள், ஆளணிகள் நிறுவன ஒழுங்கமைப்பு கிளைக்காரியாலயங்கள் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையையும், நிபுணத்துவம் பெற்ற துறையையும்.
03. வடகிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு, சமூகமீள் அமைப்பு வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடகிழக்கில் சமூகஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறுகுழுக்களை உருவாக்குதல், சிறியகடன் நடவடிக்கைகளை உருவாக்கல்ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடகிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தப்படும் வேலைத்தொகையையும் கடந்த வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத்திட்டங்களின் விபரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. அத்திட்டத்திற்கான அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு.
08. விருப்புத் தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் முதற்தரப்பாக பேணிப்பாதுகாக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**வே. விசுவலிங்கம்,**
**மாவட்டசெயலாளர்/**
**அரசாங்கஅதிபர்,**
**மன்னார்.**

(சி-9383)

# புகையிரதங்கள் நேருக்குநேர் மோதின
# வடகொரியாவில் 54க்கு மேற்பட்டோர் பலி

## 6850 குடியிருப்புக்கள் அழிந்தன

(பியோங்யாவ்)

**வடகொரியாவில் 2 புகையிரதங்கள் நேற்று முன்தினம் ஒன்றுடன் ஒன்று மோதியதில் 54 பேரளவிலேயே கொல்லப்பட்டுள்ளதாக வடகொரியாவில் உள்ள சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் தெரிவித்துள்ளது. இந்த விபத்தில் 1200ற்கு மேற்பட்டோர் காயமுற்றுள்ளதாகவும் 6850 குடியிருப்புக்கள் முற்றாக அழிவடைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.**

விபத்து சம்பவித்து நேற்று இரவு 24 மணிநேரம் கடந்துவிட்ட போதும் கம்யூனிச வடகொரிய அரசு எந்தவித உத்தியோகபூர்வ அறிக்கையையும் வெளியிடவில்லை.

இந்தச்சம்பவத்தில் வடகொரிய அரசு உண்மைகளை இருட்டடிப்பு செய்துவருவதாக கூறப்படுகின்ற போதும் ஊடகங்கள் மிகைப்படுத்தப்படுவதாக வடகொரியா குற்றம் சாட்டியுள்ளது.

சீன எல்லையில் வாகனப் போக்குவரத்துக்களை வடகொரியா நிறுத்தியுள்ளதுடன் சர்வதேச தொலைபேசி இணைப்புக்களைத் துண்டித்துள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

இது இவ்வாறிருக்க இவ்விபத்தின்போது உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 3000பேர் என செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. இது மிகைப்படுத்தப்பட்டதொகையென வடகொரியா அறிவித்துள்ளது.

# தாக்குதலுக்கு பொறுப்பேற்பு

சவுதி அரேபிய குண்டுவெடிப்பிற்கு சவுதியிலுள்ள அல்-ஹரமெயின் படை பொறுப்பேற்றுள்ளது. தனது இணையத்தளத்தினூடாகவே தாக்குதலுக்கு பொறுப்பேற்றுள்ளது.



வன்முறை ஒன்றில் கிராமத்தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டதையடுத்து தாய்வான் கிராமப்பகுதியில் ரோந்து சுற்றும் தாய்வான் இராணுவத்தினர்.

# பிரச்சினைகளுக்கான தீர்வு குறித்து ஆலோசனை நடத்த வருக!

## -நேபாள மன்னர் அரசியல்க்கட்சிகளுக்கு அழைப்பு

(காத்மண்டு)


நேபாளத்தில் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்காக ஆலோசனை நடத்த எல்லா அரசியல் கட்சிகளையும் வருமாறு மன்னர் ஞானேந்திரா அழைப்பு விடுத்துள்ளார். ராஜ்ஜிய பிரஜாதந்திரக்கட்சி,சத்பவனா கட்சி, சனநாயக நேபாள காங்கிரஸ் கட்சி ஆகிய கட்சித் தலைவர்களை நேற்று முன்தினம் மாலை மன்னர் சந்தித்து பேச்சு வார்த்தை நடத்தியுள்ளார்.

இந்த சந்திப்பிற்கு பின்னர் பேசிய முன்னாள் பிரதமரும் நேபாள சனநாயக காங்கிரஸ் தலைவருமான ஷேப்பகதூர்,

நாட்டில் பொதுத் தேர்தல்கள் நடத்தப்படுவதற்கு முன்னர், அனைத்துக் கட்சிக் கூட்டணி அரசை,தமது கட்சி ஆதரிப்பதாகக் கூறியுள்ளார். மீண்டும் தமது கட்சி ஆட்சிக்கு வரவேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

நாட்டில் தேர்தல் நடத்துவதற்கு ஏதுவான சூழல் உருவாக, மாவோயிஸ்ட் கிளர்ச்சியாளர்களிடம் தமது அரசு பேச்சுவார்த்தை நடத்தும் என்று கூறியுள்ளார்.

2002 அக்டோபர் ஷேப்பகதூரின் அரசு பதவியிலிருந்து நீக்கப்பட்டது. இதேவேளை முன்னாள் பிரதமர் பிரசாத் கொய்சாலா தலைமையிலான ஐந்து எதிர்க்கட்சிகள் மன்னருடனான சந்திப்புக் குறித்து இன்னும் முடிவு எடுக்கவில்லை என்று கூறியுள்ளது.மற்றைய கட்சிகளுடன் ஆலோசனை செய்த பின்னர் மன்னரைச் சந்திப்பது குறித்து முடிவு எடுக்கப்படும் என்று நேபாள காங்கிரஸ் தொடர்பாளர் செய்தியாளர்களிடம் கூறியுள்ளார்.



காஸாப் பகுதியில் இஸ்ரேலிய புல்டோசர் மீது கற்களை வீசி தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் பலஸ்தீனர்.

# உலகவங்கியின் திட்டங்கள் குறித்து சர்வதேச நிதிவலயமைப்பு குற்றச்சாட்டு

(லண்டன்)

உலக வங்கியின் நிதிஉதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சில திட்டங்கள் குறித்து குற்றச்சாட்டுக்கள் எழுந்துள்ளன. இந்த அமைப்பு சுற்றாடலுக்கும் உள்ளூர் வாசிகளுக்கும் ஊறு விளைவிக்கக் கூடிய பாரிய நீர்த் தேக்கங்களுக்கான நிதிஉதவிகளை வழங்கியுள்ளதாகக கூறப்படுகின்றது.

சர்வதேச நிதிவலையமைப்பு தொடர்பான ஆய்வறிக்கை யிலேயே இந்தக்குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட அணைக்கட்டுக்கள் காரணமான ஒருகோடிக்கும் மேலான மக்கள் இடம்பெயர்ந்துள்ளாகள். பாரிய அளவு நிலப்பரப்பு அணைக்கட்டுக்காக விழுங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அணைக்கட்டுக்கள் கட்டப்பட்ட நாடுகள் பெரும் கடனுக்குள்த் தள்ளப்பட்டுள்ளன.என்றும்அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளன.

# மக்களவைத் தேர்தலில் காங்.கட்சியே வெற்றிபெறும்

## -சோனியாகாந்தி நம்பிக்கை

(புதுடில்லி)

பீகார் மாநிலத்தில் வன்முறைச் சம்பவங்களால் பாதிக்கப்பட்ட349 வாக்குச்சாவடிகளில் வாக்களிப்பு ரத்துச்செய்யப்பட்டதையடுத்து நேற்று மீண்டும் வாக்களிப்பு நடந்துள்ளது.

பீகாரில் கடந்த 20 ஆம் திகதி 11 மக்களவைத் தொகுதிகளில் தேர்தல் வாக்களிப்பு வன்முறைச் சம்பவங்களிடையே நடந்துள்ளது. இதனையடுத்து வன்முறை நடந்த வாக்களிப்பு நிலைய வாக்களிப்பை ரத்துச்செய்த தேர்தல் ஆணையம் திரும்பவும் அங்கு வாக்களிப்பிற்கு உத்தரவிட்டது.

இதனையடுத்து நேற்றுக்காலை முதல் மாலை வரை வன்முறைச் சம்பவங்கள் நடந்த 349 வாக்குச் சாவடிகளில் வாக்களிப்பு நடந்துள்ளது.

இதேபோல் ஜார்க்கண்ட் மாநிலத்தில் ஆறு மக்களவைத் தொகுதிகளில் அமைந்திருக்கும் 49 வாக்குச்சாவடிகளில் நேற்று மறுவாக்குப்பதிவு பலத்த பாதுகாப்புடன் நடந்து முடிந்துள்ளது.

மணிப்பூரில் ஆறு தொகுதிகளில் இன்று மறு வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.



ஒலியா, ஆரோராவில் நீர் வாழ் உயிரினங்கள் வாழும் இடத்திலிருந்து வாலேஜோ, காலிப் என்ற இடத்துக்கு கொண்டு செல்லப்படும் 10 வயதான சௌகா என்ற திமிங்கிலம்.

# வடஇந்தியாவில் ஆலங்கட்டி மழை

(புதுடில்லி)

வடஇந்தியாவில் நேற்று முன்தினம் ஆலங்கட்டி மழையினால் ஐந்து பேர் உயிரிழந்துள்ளார்கள். உத்தரப்பிரதேசம் பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் அறு வடைப்பயிர்கள் இந்த மழையினால் நாசமாகியுள்ளன. மேற்கு உத்தரப்பிரதேசத்தில் ஆறுமாவட்டத்தில் மாஞ்செடிகள் அழிந்து விட்டன.

# இந்தியாவில் 400 இற்கும் மேற்பட்ட வாக்குச் சாவடிகளில் மறு வாக்குப்பதிவு

(புதுடில்லி)

மக்களவைத் தேர்தல் முடிவுகள் காங்கிரஸ் கட்சிக்குச் சாதகமாக இருக்கும் என்றும் தமது கட்சி மத்தியில் ஆட்சியமைக்கும் என்றும் காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி கூறியுள்ளார்.

ரபபேறலியில் பத்திரிகையாளர் கூட்டத்தில் பேசிய அவர் பல்வேறு கருத்துக்கணிப்புக்களும் வாக்குக்கணிப்புக்களும் முரண்படுகின்றன என்றார்.

காங்கிரஸ் கட்சி ஆட்சியில் இருந்த போது ஆரம்பித்த திட்டங்களைத் தான் பாரதிய ஜனதா தான் ஆரம்பித்ததாக பெருமை கூறுகின்றது. என்று குற்றம் சாட்டிய சோனியாகாந்தி உத்தரப்பிரதேசத்தில் எத்தனை தொகுதிகளை காங்கிரஸ் கைப்பற்றும் எனும் வினாவுக்கு அவர் பதிலளிக்க மறுத்துவிட்டார்.



2004 ஏதேன்சில் நடைபெறவுள்ள ஒலிம்பிக் படகுப்போட்டியில் பங்குபற்றவுள்ளவீரர் ஒருவர் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.



சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நேற்று முன்தினம் தீவிரவாதிகள் நடத்திய கார்வெடிகுண்டுத்தாக்குதலில் அந்நாட்டின் பாதுகாப்புத் துறை அலுவலகம் சின்னாபின்னமாகியிருப்பதைப் படத்தில் காணலாம்.

# புற்றுநோய் வராது தடுக்கும் ஆற்றல் விட்டமினின் E இற்குண்டு

ஒருவருக்கு புற்று நோய் ஏற்பட்டு விட்டால் அது மரணத்தின் அழைப்புக்கு ஒத்ததாகும். அதனால் அனைவரும் தனது எதிர்பார்ப்புக்களையும், கனவுகளையும் கைவிட்டு விடுவர். காரணம் அவர்களின் தலைவிதி மரணம் என்பதிலேயே முடிவடைகின்றது.

நவீன உலகில் அதற்கான மருந்துகள் கண்டுபிடிக்கப்படா விட்டாலும் அந்நோயை முன்கூட்டியே கண்டுபிடிப்பதற்கு முடியுமாயின் அதனை குணப்படுத்தக் கூமயதாக இருக்கும்.

புற்று நோய் சம்பந்தமாக வரவேற்கத்தக்க எதிர்பார்ப்புக்களை உருவாக்கக்கூடிய தகவல் ஒன்று எட்டப்பட்டுள்ளது. அது உயிர்ச்சத்து "ஈ"(E) மூலம் புற்றுநோய் ஏற்படும் மூலகாரணத்தை தடுப்பதாகும்.

பல காலமாக நடத்தப்பட்டுவந்த ஆய்வுகளின் முடிவில் பல தகவல்கள் வெளியாகியுள்ளன. மனிதர்கள் பலரிடம் செய்யப்பட்ட ஆய்வுகள் மூலம் புற்று நோயை தடுக்கும் வழிகள் கண்டறியப்பட்டுள்ளன. அன்றியும் உயிர்ச்சத்து "E" பல நன்மைகளைத் தன்னகத்தே கொண்டுள்ளமையும் அவதானிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் அமெரிக்க புற்றுநோய் கண்காணிப்புச்சங்கம் நடத்திய ஆய்வுகளின்படி உயிர்ச்சத்து "E" போதியளவு அடங்கும் உணவுகளை உட்கொள்வோரிடம் புற்றுநோய் எதிர்ப்பு சக்தியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. விசேடமாக 50 முதல் 60 வயது வரையான ஆண், பெண் இருபாலாரையும் பரிசோதனை செய்தபோது இத்தகவல் வெளிப்பட்டுள்ளது. அத்துடன் மேலும் பல தகவல்கள் கண்டறியப்பட்டுள்ளன. மேற்படி வயதையுடைய புகைப்பிடிப்போரின் குருதி மாதிரியை பரிசோதனை நடத்திய போது அனைத்து உயிர்ச்சத்துக்களும் நிறைந்தவர்களிடம் இந்நோய்க்கான அறிகுறிகள் குறைவாகக் காணப்படுதல் தெரியவருகின்றது. எனினும் இவர்களுக்கு நுரையீரல் புற்றுநோய் ஏற்படுவதற்கான வாய்ப்பு அதிகரித்துக்காணப்படுகின்றது. இது மனிதனுக்கு அச்சுறுத்தலாகும் E உயிர்ச்சத்தடங்கிய உணவுகளை உட்கொள்வது மிகவும் அவசியமாகும். குறிப்பாக நோய் கண்டவர்களை சுகதேகிகள் இதில் கவனமெடுக்கவேண்டும். அவர்கள் தானியங் கள், தாவர எண்ணை, மாஜரின், போஞ்சி ஆகியவற்றை உணவில் பெருமளவு சேர்க்கவேண்டும். இதனால் புற்று நோய் ஏற்படுவது தவிர்க்கப்படுகி றது. அல்லது உடனடியாக பீடிப்பது தடுக்கப்படுகிறது.

எக்சிஹென்ச் என்ற டெக்சாஸ். பல்கலைக்கழக விஞ்ஞானியின் கூற்றுப்படி உயிர்ச்சத்து E அடங்கிய உணவுகள் உட்கொள்ளும் போது புற்றுநோயை குறைக்க முடியும் .

இது அவ்வாறான 1000 பேரை பரிசோதனை செய்தபோது பெறப்பட்ட உண்மையாகும். அவர்களின் உணவில் எவ்வளவு "எல்டா வொகோ பெரல்" எந்தளவு "கெமா டொகோ பெரல்" அடங்கியிருக்கின் றதோ அதன்படி இந்நோய் பரவுதல் தங்கியிருப்பதாக அறியப்படுகிறது. கெமோ டொகோ பெரல் அதிகமாக உட்கொண்டவர்களில் 42 வீதமானவர்களுக்கு புற்றுநோய் பாதிப்பது குறைவடைகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது உயிர்ச்சத்து E போசிக்கப்படுவதன் மூலம் இது மேலும் குறைவடைகிறது. அதனால் ஒருவர் உட்கொள்ளும் உணவில் 50 கிராம் உயிர்ச்சத்து E அடங்குவது தவிர்க்கமுடியாதது என வைத்தியர்கள் கூறுகின்றனர்.

அமெரிக்காவில் தற்போது நாளொன்றுக்கு உயிர்ச்சத்து E 8 கிராம் அளவே உட்கொள்ளப்படுவதாகவும் இது படிப்படியாக வளர்ச்சியடைந்தால் நன்மையளிக்கும் எனவும் கூறப்படுகிறது.


# அமெரிக்காவின் பாதாள பள்ளத்தாக்கு

அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்திலிருக்கும் இந்தப் பிரமாண்டப் பள்ளத்தாக்கின் பெயர் கிராண்ட் கேன்யன் ஆகும். சுற்றுவட்டமாக 446 கி.மீ நீளமும், 30.கி.ம் அகலமும், ஏறக்குறைய இரண்டு கி.மீ ஆழமும் அமைந்த பிரமாண்டப்பள்ளத்தாக்கு கேன்யான். இந்தப் பகுதி இருபது கோடி ஆண்டுகளுக்கு முற்பட்டது என்றும் நாலாயிரம் ஆண்டுகளாக மலைப்பழங்குடியினர் வாழ்ந்து வரும் இடமாகும் என தொல் பொருள் ஆராய்ச்சியாளர் தெரிவித்துள்ளார். பொன் நிறம், கரும் பச்சை, இளநீலம், சிவப்பு, கலந்த கறுப்பு, மைக்கறுப்பு, போன்ற இத்தனை நிறங்களும் பளபளக்க சூரியனின் பொன்நிறக்கதிர்கள் படியும் இயற்கையின் கொடை இது. அரிசோனா மாநிலத்துப் பாலைவனப்பகுதிகளில் 6820 அடி உயரத்தில் அமைந்துள்ள இதைக் காண இதுவரை உலகம் முழுவதும் இருந்து அறுபது லட்சம் சுற்றுலாப்பயணிகள் வந்துபோயிருக்கிறார்கள்.

மிதமான வெயில் அடிக்கும் இளவேனிற் காலத்தில் ஒரு நாளைக்கு 25000 பேருக்கு குறையாமல் வந்து இதைப்பார்த்து விட்டுப்போகிறார்கள்.

90 ஆண்டுகளுக்கு முன் அமெரிக்க சனாதிபதி ரூஸ்வெல்ட் இதன் அழகைக் கண்டு வியந்தார். இந்த அழகான அதியசப்பள்ளத்தாக்கு இயற்கை அழகு குறையாமல் ஒரு பூங்கா வைப்போல் பாதுகாக்கப்படவேண்டும் ஒரு கட்டடம் கூட இங்குகட்ட அனுமதிக்கக் கூடாது என சொல்லிவிட்டு அதற்குரிய சட்டத்தையும் போட்டார். அதன் பிறகு 1906ம் ஆண்டு முதல் இது பாதுகாக்கப்பட்ட இடமாக உருவாகிற்று.

ஒரு தடவை இப்பகுதிக்கு காரில் சென்று பார்த்து வரக் கட்டணம் 20 அமெரிக்க டொலர். வெவ்வேறு இடங்க ளுக்கு காரில் போய் நின்று பார்த்து ரசிக்கலாம்.



சுமார் இரண்டு கி.மீ ஆழமுள்ள பள்ளத்தாக்கை இறங்கி அடிவாரம் வரைப்போய்ப்பார்த்து, முழு அகலமும் நடந்து கண்டு கழித்து திரும்பி ஏறிவரலாம் முழுவதுமாக இரண்டு நாட்களாகும்.

சுமார் 100 டொலர் செலவில் ஹெலிகொப்டரில் பறந்து போய், உள்ளே சுற்றிப்பதினைந்து நிமிடங்கள் பார்த்து விட்டுத்திரும்பலாம்.

இரவு ஹோட்டலில் தங்கி நிலாவெளியில் அதன் அழகைப் பார்த்து ரசித்துவிட்டுத் திரும்பலாம். கீழே பள்ளத்தாக்கின் அடிமட்டத்தில் வெள்ளியாறு போல ஓடும் கொலராடோ நதியில் படகில் உல்லாசப்பயணம் போய் வர லாம். இப்படி உல்லாசப்பயணிகள் இதன் அழகைப் பலவாறாகவும் ரசித்து மகிழ்கிறார்கள்.

பல்லாயிரம் ஆண்டுகளாக இருந்து வரும் பள்ளத்தாக்கின் பல்வேறு சிகரங்களுக்கும் பள்ளப்படிவங்களுக்கும் ஆதி கால இந்தியர்கள் பல பெயர்களை வைத்திருக்கிறார்கள்.

சிவன், விஸ்ணு, பிரம்மா, புத்தா, தேவா மனு, சௌராஸ்ட்றா போன்ற பெயர்கள் நம்மை வியக்க வைக்கின்றன ஆண்டு தோறும் 50,000 பேர் இங்கு இரவு நேரத்தில் ஓட்டலிலும், மலை. முகட்டின் கூடாரங்களிலும் தங்குகின்றார்கள். விநோதமான இயற்கை உணவு வகைகளைச் சாப்பிடுகிறார்கள். இதற்காக இடம் பிடிக்க ஆறு மாதங்களுக்கு முன்னதாகவே, பெயரைப் பதிவு செய்து கொள்கிறார்கள்.

சுமார் 480 கி.மீ நீளம் கொண்ட கொலராடோ நதி. இதன் அடித்தளத்தில் ஓடுகிறது நுரை ததும்ப சீறிப்பாய்ந்து வரும் நதியில் துள்ளி விளையாடும் படகுகளில் பிரயாணம் செய்ய ஆண்டு தோறும் 25000 உல்லாசப்பயணிகள் வருகிறார்கள். அவர்களில் பலர் தைரியசாலியான பெண்மணிகள்.

ஆயிரக்கணக்கான வகைகளில் செடிகள், பாறை வகைகள் வெவ்வேறு மிருகங்கள் ஆகியன நிறைந்த இயற்கையின் அரிய சுரங்கம் இது இங்கு தங்கத்தையும், இரத்தினக் கற்களையும் தோண்டியெடுக்க ஆதிகால அமெரிக்கர்கள் அலைந்ததுண்டு.



யப்பானில் தயாரிக்கப்பட்ட உலகிலேயே மிகச் சிறிய கையடக்கத் தொலைபேசி. நீளம் 85 மி.மீ அகலம் 54.மி.மீ உயரம் 8.6மி.மீ.

# கரப்பான் பூச்சி

கரப்பான் பூச்சி மற்றைய உயிரினங்களைப் போலவே, உணவு, சூடு, ஈரம் என்பன கிடைக்குமிடமெங்கும் வாழும். கரப்பான் பூச்சியின் கண்கள் எல்லா திசைகளிலும் பார்க்கவல்லவை. 2000 தனிப்பட்ட லென்ஸ்கள் உள்ளன.

மீசைகள் சகல திசைகளையும் தடவும் வாசனையும் அறிய உதவுகின்றது. அத்துடன் பின்பக்கத்தில் குட்டிமீசை உண்டு.

சாப்பிடுவது, வாசனை பார்ப்பது வாய்தான். தனிப்பட்ட மூக்குக் கிடையாது. பெண் கரப்பான் பூச்சிகள் வாழ்நாள் பூராவும் கர்ப்பமாகவே இருக்கும். ஒரு பையில் 16இலிருந்து 64 முட்டைவரை போட்டு அதை ஏதாவது ஒரு பொருளுடன் ஒட்டவைத்துவிடும். இதயம் சின்னக்குழாய் போன்றது. இதயம் நின்று போனாலும் கரப்பான் பூச்சி வாழும். உடம்பு பூராவும் மூச்சுவிடும் ஆற்றல் உண்டு. இரத்தம் என்று கிடையாது. நாம் நசுக்கிவிட்டால் வெள்ளையாக கசிவது இரத்தம்போலதான் இருக்கும். ஆனால் அது கரப்பான் பூச்சியின் இரத்தம் அல்ல.

இந்தக் கசியும் கசிவில் கொழுப்பு சக்தியும் சாப்பிட்டதை மாற்றும் சக்தியும் உண்டு. மூளை உடம்பு முழுவதுமே உண்டு. பெரும்பாலும் அடிவயிற்றில் தலையில் கொஞ்சம் நரம்பு மண்டலம் உண்டு. தலையை வெட்டிப்போட்டால் கூட கரப்பான் பூச்சி ஒருவாரம் உயிர்வாழும் ஆற்றல் கொண்டது.



யப்பானிய தொலைத் தொடர்பு சாதன நிறுவனத்தால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள "பொக்கட் எனஜி" என அழைக்கப்படும் சூரிய ஒளியினால் இயக்கக்கூடிய பட்டரி சார்ஜர் இது 3.8 முதல் 8.5 வரையான வோல்ட்டைக் கொண்ட பட்டரிகளுக்கு சக்தியை வழங்கும்.

### யுனிசெவ் நிதி உதவியுடன்

# தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சிறுவர் நலத்திட்டம் நடைமுறை

(அலுவலகசெய்தியாளர்)

**யுனிசெவ் நிறுவன நிதியுதவியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தினரால் சிறுவர் நலத்திட்டம் ஒன்று நடைமுறைப்படுத்தப் பட்டுள்ளது.**

மேற்படி திட்டத்தின் மூலம் சமூகத்தில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களை இனங்கண்டு புனர்வளிப்பதற்காக வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களிலும் ஏறத்தாழ ஒரு இலட்சத்து ஐம்பதினாயிரம் பேர் இனங்காணப்பட்டுள்ளனர். இச்சிறுவர்கள் பெரும்பாலும் ஊனமுற்றவர்களாகவும், பாடசாலையிலிருந்து இடைவிலகியவர்களாகவும், சிறுவர் தொழிலாளர்களாகவும் வீதியோர சிறுவர்களாகவும், போசாக்கு குறைந்தவர்களாகவும் அநாதைச்சிறுவர் களாகவும் காணப்படுகின்றனர்.

இவர்களுக்கு நிவாரணம் வழங்கும் வரையில் முதற்கட்டமாக தொழிற்பயிற்சி வழங்க 350 பேரும், சிறுவர் இல்லங்களில் இணைக்க 45 பேரும், பாடசாலைகளில் மீளஇணைக்க 200 பேரும், விசேட மருத்துவத்திற்கு உட்படுத்த 12 பேரும், போசாக்கு வழங்க 30 பேரும், கல்விக்கான உதவியும் நுண்கடன் வழங்க 800 பேரும் தெரிவாகியுள்ளனர். இவர்களுக்கான உதவிகள் வெகுவிரைவில் செய்து கொடுக்கப்படுமெனவும் சிறுவர்நலத்திட்ட மாவட்ட நிகழ்ச்சித் திட்ட அலுவலர் ம.மதனமோகன் தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்;

பாடசாலையில் மீளஇணைக்கப்படுவோருக்கு தேவையான உபகரணங்கள், சீருடைகள் என்பன வழங்கப்படும் எனவும் சிறுவர்களின் உழைப்பில் பலகுடும்பங்கள் தங்கியுள்ளன. அக்குடும்பங்களுக்கு வருமான அதிகரிப்பு அல்லது நுண் கடன் திட்டங்களை மேற்கொள்ளவுள்ளதாகவும் கூறினார். (ச)

# கிளி.தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி பெற்றோர் பதிவுசெய்க

### கல்லூரி அதிபர் கோரிக்கை

(அலுவலகசெய்தியாளர்)

கிளி.தொழில்நுட்பக் கல்லூரியில் தொழிற்பயிற்சி பெற்று வெளியேறிய மேசன், தச்சு தொழிலாளர்களை அவர்களின் பகுதிக்குரிய பிரதேச செயலகங்களில் சென்று பதிவுகளை மேற்கொள்ளுமாறு கிளி.தொழில் நுட்பக் கல்லூரி அதிபர் கேட்டுள்ளார்.

கிளிநொச்சி தொழில்நுட்பக் கல்லூரி ஆரம்பிக்கப்பட்டது முதல் இன்றுவரையான காலம்வரை மேசன், தச்சு தொழில்சார் பயிற்சிகளைப் பெற்று வெளியேறி பல் வேறுபட்ட இடங்களிலும் தொழில் புரிபவர்கள் தொழில் இன்றி இருப்பவர்கள் அனைவரையும் பூநகரி, கண்டாவளை, கரைச்சி, பளை ஆகிய பிரதேச செயலகங்களில் தமக்குரிய பதிவுகளைத் தவறாது மேற்கொள்ளும்படியும் வேண்டியுள்ளார். மேற்படி கல்லூரியில் பயின்று வெளியேறியவர்களுக் கான வேலைவாய்ப்புக்களை வழங்குவதற்காகவே குறித்த பதிவுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். இவ்வாறு மேசன், தச்சு தொழில் பயின்று 300க்கும் மேற்பட்டவர்கள் வெளியேறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (லோ,தீ)

# மன்னார் மாவட்டத்தில் விவசாய தொழில் நுட்பக்கண்காட்சி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் விவசாயத்திணைக்களத்தால் நடாத்தப்படும் விவசாய தொழில் நுட்ப கண்காட்சி வெகு விமரிசையாக நடைபெற்றுள்ளது. மூன்றாம் நாள் நிகழ்ச்சியில் மன்னார் மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் உதவி ஆணையாளர் திருமதி. ஏ.கனிடிமோ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்.

அங்கு உரையாற்றிய விவசாய ஆராய்ச்சி அதிகாரி, விவசாயிகளுக்கு சிறந்தமுறையில் விவசாயம் செய்தல் மற்றும் புதியமுறை விவசாயம் பற்றியும் கிருமிநாசினி பாவித்தல் பற்றியும் தெளிவான விளக்கத்தை வழங்கினார். இந்நிகழ்வில் பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டு நிகழ்வை பார்வையிட்டனர்.

# சாவகச்சேரி நகரில் மீளக்குடியேற வந்த மக்கள் பள்ளிவாசலில் தஞ்சம்

(வடமராட்சி)

சாவகச்சேரி நகரப்பகுதியிலுள்ள முஸ்லிம்மக்களது குடியிருப்புக்களில் இருந்து படையினர் வெளியேற மறுத்து வருவதால் மீளக்குடியமர வந்திருந்த முஸ்லிம் குடும்பங்கள் தொடர்ந்தும் அகதி வாழ்க்கையினை வாழவேண்டிய நிலைதோன்றி யுள்ளது. இந்நிலையில் மீளக்குடியமர வந்திருந்த குடும்பங்கள் தற்போது சாவகச்சேரி ஜும்மா பள்ளிவாசலில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இதனிடையே புத்தளம் பகுதியிலிருந்து மீளக்குடியமர வந்த ஐந்திற்கும் அதிகமான முஸ்லிம் குடும்பங்களை அவர்களுடைய சொந்த வீடுகளுக்குதிரும்ப படைத்தரப்பு அனுமதிக்க வில்லையென தென்மராட்சி பிரதேச செயலர் யாழ்.படைத்தலைமைக்கு முறைப்பாடு செய்துள்ளார்.

1990ஆம் ஆண்டின் இறுதியில் யாழ்.குடாநாட்டிலிருந்து வெளியேற்றப்பட்ட முஸ்லிம் குடும்பங்கள் பலவும் படிப்படியாக தற்போது மீளக்குடியமர்ந்து வருகின்றன. குறிப்பாக யாழ்.நகரைஅண்டியும் அதை அண்டியுள்ள முஸ்லிம் பகுதிகளிலும் இக்குடும்பங்கள் மீளக்குடியமர்ந்து வருகின்றன.

இவ்வாறு சாவகச்சேரி பகுதியிலிருந்து இடம் பெயர்ந்து புத்தளம் பகுதியில் வசித்து வந்த ஐந்து முஸ்லிம் குடும்பங்களே தற்போது மீளக்குடியமரும் நோக்கில் சாவகச்சேரி திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (27)

# கால்நடை வைத்திய நிலையத்தை முல்லை.இல் செயற்படுத்தக் கோரிக்கை

முல்லைத்தீவு நகரப்பகுதிக்கு சகல அரச திணைக்களங்களும் இயங்க ஆரம்பித்த போதும் ஒரு சில அரச திணைக்களங்கள் இன்னமும் வருகைதரவில்லை. அந்த வரிசையில் அரச கால்நடைவைத்திய திணைக்களமும் இன்னமும் கொண்டுவரப்பட வில்லையென கரைதுறைப்பற்று உதவி அரச அதிபர் தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில் குமுழமுனை, சிலாவத்தை, முள்ளியவளை ஆகிய இடங்களில் அதிகளவான கால்நடைப் பண்ணைகள் இருந்த போதும் கால்நடை மருத்துவ சேவைக்கு புதுக்குடியிருப்பு பகுதிக்கே மக்கள் பெரும் சிரமத்தின் மத்தியில் செல்ல வேண்டியுள்ளதாகவும், இதற்காக நகரப் பகுதியில் இவ்வலுவலகம் அமைக்கப்படவேண்டும் என்றும் இல்லாவிடின் தற்காலிகமாகவாவது நடமாடும் அலுவலகம் என்றாலும் அமைக்கப்பட வேண்டும் என்றும் கேட்கப்பட்டுள்ளது. (20)

# மீன், இறாலுக்குப் பாவிக்கும் ஐஸ் குளிர்பானத்துக்கு உபயோகிக்கத் தடை

(முல்லைத்தீவு)

இறால்,மீன்களுக்கு பாவிக்கும் ஐஸ் (குளிர்கட்டி) குளிர் பானங்களில் கலப்பது முற்றாகத் தடை செய்யப்பட்டுள்ளது.

இவ் ஐஸ் கட்டிகளை விற்பனைசெய்பவர்களும், பாவிப்பவர்களும் இவ்வறிவித்தலை மீறினால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என முல்லை. மாவட்ட தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் தெரிவித்தார்.

சுத்திகரிக்கப்படாமல் இறால், மீன்களை பாதுகாப்பதற்காக உற்பத்தி செய்யப்படும் மேற்படி ஐஸ் கட்டிகளை குளிர்பானத்தில் கலந்து பருகினால் பெரும்ஆபத்தை விளைவிக்கும் நோய்கள் பரவக்காரணமாக இருக்கும். எனவே இவ்வாறான ஐஸ்சைப் பாவிக்க வேண்டாம் என மக்களை கேட்டுக் கொள்வதாகவும் அவர் கூறியுள்ளார். (20)

# மதுக்கடைக்கு வருவோரால் பொதுமக்களுக்கு அசௌகரியம்

(அலுவலக செய்தியாளர்)

கோணாவில் பகுதியில் பாடசாலை, ஆலயம், பொதுச்சந்தை என்பனவற்றிற்கு அண்மையில் அமைந்துள்ள மதுக்கடைக்கு வரும் வழமையாளர்களின் சீரற்ற செயற்பாடுகளினால் பாடசாலை செல்லும் மாணவர்களும், பொதுமக்களும் பெரும் அசௌகரியங்களுக்குள்ளாகி வருகின்றனர். மேற்படி மதுக்கடையினை அகற்றுமாறு உரியவர்களுக்கு கடிதமூலமும் நேரடியாகவும் தெரியப்படுத்தி ஒருவருட காலமாகியும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென கிராமஅபிவிருத்திச் சங்கத்தலைவர் அ.அருள்பிரகாசம் விசனம் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில் தற்போது இம்மதுக்கடையினால் ஏற்பட்டுவரும் சீரற்ற தன்மையானது சமூகசீர்கேடுகளைத் தோற்றுவிப்பதாயும் முன்பு இருந்ததைவிட இப்போது மதுக்கடைக்கு வருவோரின் தொகை அதிகரித்திருப்பதால் சமூக செயற்பாடுகளை மேலும் பாதிப்பதாக அமைந்துள்ளதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ச)

# சதுரங்கப் போட்டியில் இராமநாதபுரம் ம.வி. வெற்றி

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட சதுரங்க சம்மேளனம் மாவட்ட மட்டத்தில் நடாத்திய சதுரங்கபோட்டியில் கிளிநொச்சி இராமநாதபுரம் மகாவித்தியாலயம் 12வயதுப் பிரிவில் வெற்றி பெற்றுள்ளது. செல்வன் ஜெயராஜா ஜெயமாருதி என்றமாணவன் வெற்றிக் கிண்ணத்தை பெற்று இராமநாதபுர மகாவித்தியாலயத்திற்கு பெருமை சேர்த்துள்ளார்.

அத்துடன் இம் மாணவன் எதிர்வரும் 6ஆம் திகதி கேகாலையில் நடைபெறவுள்ள மாகாணமட்ட சதுரங்கப்போட்டியில் பங்குபற்றும் வாய்ப்பையும் பெற்றுள்ளார்.

## வேவுவிமானம் நோட்டம்

நேற்றுக்காலை வடமராட்சி கிழக்கு பிரதேசத்தில் கட்டைக்காடு வெற்றிலைக்கேணி ஆழியவளை உடுத்துறை ஆகியவற்றை மையமாக வைத்து சிறிலங்காவின் வேவு விமானமொன்று காலை 8.00 மணி தொடக்கம் காலை 10 மணி வரை சுற்றிக் கொண்டிருந்தது.

# இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முல்லை மாவட்டத்தில் திறப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் இரு ஆரம்ப சுகாதார நிலையங்கள் திறந்து வைக்கப்படவுள்ளன. கூழாமுறிப்பில் எதிர்வரும் 10.05.2004 அன்று, இரணைப்பாலையில் எதிர்வரும் 11.05.2004 இலும் இவை திறந்துவைக்கப்படவுள்ளன.

இதேவேளை புதுக்குடியிருப்பில் இயங்கிவரும் ஆரம்ப சுகாதார நிலையம் அடிப்படை வசதிகள் இன்றி இயங்குவதாக சிகிச்சை பெறச் செல்வோர் தெரிவித்துள்ளனர்.

போதிய இருக்கைகள் இல்லை. எந்தவிதமான ஆய்வுகூட வசதிகள் இல்லை, நிலம் புழுதியாகக் காணப்படுவதால் நிலத்தில் இருக்கமுடியாத நிலையென பல குறை பாட்டுடன் இச்சிகிச்சை நிலையம் இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (20)

## வரட்சி நிவாரணம் வழங்கப்படாமையால் பாதிப்பு

முல்லை மாவட்டத்தில் இம்முறை விவசாயிகள் வரட்சியினால் மிகவும் மோசமாக பாதிப்படைந்துள்ள நிலையிலும் இன்னமும் வரட்சி நிவாரணம் வழங்கப்பட வில்லையென விவசாயிகள் கவலை தெரிவித்தனர். இதன் விபரங்கள் உரிய இடங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (20)

## போட்டி

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் கால்நடைப் பண்ணையாளர் மத்தியில்போட்டிகள் நடத்துவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன. சிறந்த ஆட்டுப்பண்ணை, மாட்டுப்பண்ணை, கோழிப்பண்ணை என்பன தெரிவுசெய்யப்பட்டு பெறு மதிமிக்க பரிசில்கள் வழங்கப்படவுள்ளன. இவற்றோடு செயற்கைமுறை சினைப்படுத்தலில் கூடுதலான பயன் பெற்ற 30 பயனாளிகளுக்கு 8000 ரூபா வீதம் மானியமாக வழங்கப்படவுள்ளதாக அரச கால் நடை வைத்தியர் சு.கஜரஞ்சன் தெரிவித்தார். (20)

# சிறந்த விவசாயிகள் தேர்வுக்கு விண்ணப்பிக்கக் கோரிக்கை

(முல்லைத்தீவு)

முல்லை மாவட்டத்தில் சிறுபோக பயிர்ச்செய்கையில் வருடாவருடம் நடாத்துவது போன்று போட்டிகள் நடாத்தி பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.சிறுபோக நெற்செய்கை வீட்டுத் தோட்டம், உபஉணவுப் பயிர்ச்செய்கை என்பன போட்டிகளில் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளன. இதற்கான விண்ணப்பங்களை அந்தந்த கிராம அலுவலர் ஊடாக அனுப்பி வைக்குமாறு முல்லை. மாவட்ட உதவி விவசாயப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (20)

# வவுனியா வைத்தியசாலை குறைதீர்க்கக் கோரிக்கை

(கொழும்பு)

புதிய பாராளுமன்றத்தில் முதல் அமர்வின் போது வவுனியா வைத்தியசாலையில் அடிப்படை வசதிகளை நிறைவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்குமாறு வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர், சுகாதார அமைச்சர்நிமல்சிறிபாலடிசில்வாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதேவேளை வைத்தியசாலையின் தேவைகள் குறித்த பட்டியலை அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு தெரிவித்த அமைச்சர் இம்முறை வடக்குகிழக்கு வைத்திய சாலைகளின் அபிவிருத்திக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்று உறுதியளித்துள்ளார்.

# போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத்திட்டம் (கார்ப்)

## ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
## கடன் இலக்கம் -2043 -ஸ்ரீ (எஸ்.எப்)

## கிளிநொச்சி மாவட்டத்தில் சமூக மீளமைப்பு அபிவிருத்தித் திட்டத்தை அமுல்ப்படுத்துவதற்கு பங்குதாரராவதற்கான அரசசார்பற்ற நிறுவனங்களின் (என்.ஜீ.ஓ) விருப்ப வெளிப்பாடு பற்றிய அழைப்பு.

போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனர்வாழ்வுத் திட்டத்தின் ஆகுசெலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்து கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளது. வடகிழக்கின் போரினால் மோசமாகப் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் பிரதானமாக யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்ட மக்களின் வாழ்க்கைத் தரத்தை மீளமைப்பதற்கும் அத்தியாவசிய உட்கட்டமைப்பு வேலைகளுக்கு உதவிகளை நல்குவதுமே இத்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். இத்திட்டம் வடகிழக்கு மாகாணத்திலுள்ள எட்டு மாவட்டங்களில் செயற்படுவதோடு விடுவிக்கப்பட்ட, விடுவிக்கப்படாத பகுதிகளையும் உள்ளடக்கியதாகும்.

இத்திட்டம் அரசாங்க திணைக்களங்களின் உதவியுடன் (அரச திணைக்களங்கள், திட்ட வெளிக்கள உத்தியோகத்தர்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள்) உள்ளூர் சமுதாய அமைப்புக்களினாலும், உள்ளூர் சமூகங்களினாலும் அமுல்படுத்தப்படும். இந்த சமூக அபிவிருத்தி உப திட்டங்கள் சமூகத்தை மையமாகக் கொண்ட சமூகத்தவர்களின் பூரண பங்களிப்போடு செயற்படுத்தப்படும். இத்திட்டத்தில் பயன்பெறும் சமூகத்தினர் இத்திட்டத்தை திட்டமிடுவதிலும், நடைமுறைப்படுத்துவதிலும், இத்திட்டத்தின் அன்றாட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதிலும் முற்றாக பங்களிப்புச் செய்வதை உறுதிப்படுத்த வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டத்தை அமுல் நடத்துவதற்காக சில கிராமங்கள் ஆரம்பத்தில் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளைப் பொறுத்து மேலும் பல கிராமங்கள் இத்திட்டத்தில் சேர்த்துக்கொள்ளப்படும்.

பின்வரும் கிராமங்களில் இனங்காணப்பட்ட சமூகத்தினரிடையே சமூக அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கும், சமூகத்தை அபிவிருத்திக்கு தயார்படுத்துவதற்கும், வளங்களை ஒன்றுபடுத்துவதற்கும், நிறுவன ரீதியான அபிவிருத்தியை உருவாக்குவதற்கும் ஏற்கனவே வடக்கு கிழக்கில் திட்டங்களை வெற்றிகரமாக செயற்படுத்தும் தகுதிவாய்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களிடமிருந்து விருப்பத்தை வெளிப்படுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகின்றது.

| இல | மாவட்டம் | உதவி அரசாங்க அதிபர் பிரிவு | கிராமம் |
|---|---|---|---|
| 1 | கிளிநொச்சி | பச்சிலைப்பள்ளி | இயக்கச்சி |
| 2 | கிளிநொச்சி | பூநகரி | பரமன்கிராய் |
| 3 | கிளிநொச்சி | பூநகரி | மட்டுவில் நாடு மேற்கு |
| 4 | கிளிநொச்சி | கரைச்சி | ஜெயந்திநகர் |
| 5 | கிளிநொச்சி | கண்டாவளை | உமையாள்புரம் |

ஆர்வமுடைய அரசசார்பற்ற நிறுவனம் இது பற்றி மேலதிக விபரங்களை வேலைநாட்களில் காலை 9.30 மணி தொடக்கம் மாலை 3.30 மணிவரை கிளிநொச்சி மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபரிடமிருந்து (தொலைபேசி 021-2283945, தொலைநகரி 021-2283965) பெற்றுக்கொள்ளலாம்.

இத்திட்டத்தை அமுல் நடத்த விரும்பும் தகுதி வாய்ந்த அரச சார்பற்ற நிறுவனம் தங்களுடைய விருப்பத் தெரிவை மாவட்ட செயலாளருக்கு/அரசாங்க அதிபருக்கு மே.18.2004அன்று (18.05.2004) மாலை 3.00 மணிக்கு முன்பதாகத் தெரிவிக்க வேண்டும். ஒவ்வொரு கிராமத்துக்கும் விருப்பத் தெரிவு வெவ்வேறாகச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விருப்பத் தெரிவை அறிவிக்கும்பொழுது பின்வரும் விபரங்களை உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

01. விண்ணப்பிக்கும் நிறுவனம் பற்றிய விபரங்கள், நிறுவனத்தின் நோக்கம், முகவரி, தொலைபேசி இலக்கம், சட்டரீதியான பதிவு செய்த விபரங்கள், ஆளணிகள், நிறுவன ஒழுங்கமைப்பு, கிளை காரியாலயம் முதலியன.
02. தொழில்சார் அனுபவமுடைய நிபுணர்களின் எண்ணிக்கையும் நிபுணத்துவம் பெற்ற துறையும்.
03. வடக்கு கிழக்கு மாகாணத்தில் புனரமைப்பு சமூக அபிவிருத்தி வேலைகளில் உள்ள அனுபவம்.
04. விசேடமாக வடக்கு கிழக்கில் சமூக ஒருங்கிணைத்தல், சமூக பொருளாதார அபிவிருத்தி நடவடிக்கைகள், சிறுகுழுக்களை உருவாக்கல், சிறிய கடன் நடவடிக்கைகளை உருவாக்குதல் ஆகியவற்றில் உள்ள அனுபவம்.
05. வடக்கு கிழக்கில் தற்போது தாங்கள் நடைமுறைப்படுத்தும் வேலைத் தொகையும், கடந்த 05 வருடங்களாக நடைமுறைப்படுத்திய வேலைத் திட்டங்களின் விபரங்களையும்.
06. இக்குறிப்பிட்ட துறையில் சாதித்த குறிப்பிடத்தக்க சாதனைகள்.
07. விருப்ப தெரிவிற்கான வேறு ஏதாவது தகவல்கள்.

எல்லா ஆவணங்களும் விண்ணப்பமும் அந்தரங்கமாகப் பேணிக்காக்கப்படும் என்பதையும் அவைகள் திருப்பி அனுப்பப்படமாட்டாது என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**றீ.இராசநாயகம்,**
**மாவட்ட செயலாளர்/அரசாங்க அதிபர்,**
**கிளிநொச்சி மாவட்டம்.**

(சி-9455)



**சிந்தனைக்கு**

சமூக நிர்வாகத்தில் நீதித்துறை பிரதானமானது. நேர்மை, ஒழுக்கம், கண்ணியம், கட்டுப்பாடு ஆகிய பண்புகளைக் கொண்டவர்களே நீதி பரிபாலனத்தைக் கையாள முடியும்.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 24-04-2004

## ஏன் இந்தப் போட்டி!

எதிர்பார்க்கப்பட்டது போலவே 13-ஆவது பாராளுமன்றத்திற்கான சபாநாயகர் தெரிவு கடும் போட்டியின் மத்தியில் நடைபெற்று முடிந்துள்ளது. மூன்று தடவைகள் வாக்கெடுப்பு நடாத்திய நிலையில் எதிர்க் கட்சி வேட்பாளரான டபிள்யூ ஜே.எம். லொக்கு பண்டார ஒரு மேலதிக வாக்கைப் பெற்று சபாநாயகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

சபாநாயகர் பதவிக்குக் கடும் போட்டி இருக்கும் என்பது எதிர்பார்க்கப்பட்டதே ஆயினும், எதிர்த்தரப்பின் வெற்றி என்பது சிறிது எதிர்பாராததொரு முடிவே ஆகும். ஏனெனில் ஜாதிக ஹெல உறுமயவை ஐ.ம.சு. முன்னணி எவ்வாறெனினும் தமது வழிக்குக் கொண்டு வரும் என்பது பொதுவான எதிர்பார்ப்பாக இருந்ததெனினும், ஜாதிக ஹெல உறுமயவில் ஏற்பட்ட குழப்பமான நிலை – அதன் பின்னணியில் ஐ.ம.சு.முன்னணி இருந்ததென்ற குற்றச்சாட்டு என்பன ஆளும் கட்சிக்கு பாதகமாக அமைந்துவிட்டதெனலாம்.

சனநாயக நாட்டில் எதிர்க்கட்சியைச் சார்ந்தவொருவர் சபாநாயகரானதற்கு இது தான் முதல் உதாரணம் அல்ல. பல சனநாயக நாடுகளில் எதிர்கட்சியைச் சார்ந்தவர்கள் சபாநாயகராக இருந்துள்ளனர். சனநாயகப், 'பாரம்பரியம் மரபுகள் என்பனவற்றிற்கு ஏற்ப அவர்கள் நடந்தும் உள்ளனர்.

ஆனால், சிறிலங்காவில் நேற்று முன்தினம் இடம்பெற்றது போன்று பாராளுமன்றத்தில் பெரும் களேபரத்தின் மத்தியில் மூன்று தடவைகள் வாக்களிப்பு இடம்பெற்றமையும் ஓர் எதிர்க்கட்சி வேட்பாளர் வெற்றி பெற்றமையும் வரலாற்றில் முதல் பதிவாக இருக்கலாம். அத்தோடு, இச்சபாநாயகரின் பணி எதிர்கால அரசியலில் முக்கியத்துவம் வாய்ந்ததொன்றாகவும் இருக்கலாம்.

பொதுவில் சனநாயகப் பாரம்பரியம் சிறந்து விளங்கும் நாடுகளில் சபாநாயகர் ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப்படுவதே மரபு. சில வேளை போட்டி இடம்பெறினும்கூட இத்தகைய கடும் போட்டியோ, களேபரம் மூலமோ சபாநாயகர் தெரிவு செய்யப்படுவதில்லை. ஏனெனில், சபாநாயகர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் அவர் தனது கட்சி சார்பான நடவடிக்கைகளில் இருந்து விலகிக் கொள்வது வழமையாகும்.

இதன் காரணமாக சபாநாயகராக ஒருவர் தெரிவு செய்யப்பட்ட பின்னர் – அடுத்த தேர்தலில் அச்சபாநாயகரின் தொகுதியில் எதிர்த்தரப்பின் வேட்பாளர்களை நிறுத்தாத மரபு ஒன்றுகூடப் பிரிட்டனில் இருந்தது. அத்தனை தூரம் சபாநாகர்கள் கட்சி சாராத செயற்பாட்டிற்கு உரியவராகிறார். அதாவது, ஒரு நீதிபதியின் ஸ்தானத்தில் செயற்படுபவராகின்றார்.

ஆனால், தற்பொழுது சிறிலங்காவில் சபாநாயகர் தெரிவு செய்யப்பட்டுள்ள விதமானது, இம்மரபுகளை எல்லாம் ஓரம் தள்ளிவிடும் அளவிற்குப் போட்டி மிக்கதானதாகவும், களேபரம் மிக்கதானதாகவும் ஆகியுள்ளது. இந்நிலையில், புதிய சபாநாயகர் தனது அரசியல் கட்சி சாராத தனது நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா? அதாவது, சபாநாயகரின் நடுநிலைமையுடனான பாத்திரத்தை வகிக்க முடியுமா? என்பதே கேள்வியாகும்.

புதிய சபாநாயகர் டபிள்யூ. ஜே.எம். லொக்கு பண்டார வெற்றியின் பின் பாராளுமன்றத்தில் பேசுகையில், அரசியல் வேறுபாட்டை மறந்து செயற்படப் போவதாகக் கூறியிருப்பினும், அது எந்தளவிற்குச் சாத்தியப்பாடானது என்பது கேள்விக்குரியதே. அவ்வாறு அரசியல் வேறுபாட்டை மறந்து செயற்படுவதற்கு டபிள்யூ ஜெ.எம். லொக்கு பண்டாரவால் முடியுமானால், அவர் இத்தகையதொரு கடும் போட்டியில் பங்குபற்றாது ஒதுங்கிக் கொண்டிருத்தல் வேண்டும்.

சிறிலங்காவில் சபாநாயகருக்கு நடந்த போட்டியானது ஆளும் – எதிர்க்கட்சிக்கு இடையிலான அதிகாரப் போட்டி ஒன்றின் வெளிப்பாடே ஒழிய பாராளுமன்றத்திற்கான தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கான போட்டியல்ல. அவ்வாறில்லாது தலைவரைத் தான் தேர்ந்தெடுக்கும் போட்டியாக இருந்திருப்பின் இரண்டு பிரதான கட்சிகளும் அமைதியான முறையில் இவ்வாக்களிப்பை நடத்திமுடித்திருப்பர். சபாநாயகர் தேர்ந்தெடுக்கும் வாக்களிப்பின் போது வாக்கு மோசடி போன்றவற்றைப் பற்றிச் சிந்திக்க வாய்ப்பிருந்திருக்க மாட்டாது. ஆகையினால், திரு. லொக்கு பண்டார சபாநாயகராகத் தேர்ந் தெடுக்கப்பட்டமையானது ஐ.ம.சு. முன்னணி அரசாங்கத்திற்கு ஒரு நெருக்கடியே ஆகும். ஏற்கனவே, அமைச்சரவை அமைப்பதில் சிக்கலை எதிர்கொண்டுள்ள ஐ.ம.சு.முன்னணியினர், சபாநாயகருக்கான போட்டியிலும் தோல்வி அடைந்துள்ளமை அக்கூட்டணியைப் பொறுத்தவரை பெரும் பின்னடைவே. லொக்கு பண்டாரவின் வெற்றியானது பாராளுமன்றத்தின் அதிகாரம் குறித்து சனாதிபதிக்கும்– பாராளுமன்றத்திற்கும் இடையில் கடும் மோதலைத் தோற்றுவிக்கத் தக்கதாகும்.

அதிலும் குறிப்பாக, சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் யாப்பை மாற்றியமைக்கும் நோக்கத்திற்கு இது பெரும் முட்டுக்கட்டையாக உருவாகக் கூடியதாகும். ஆகையினால், இச்சபாநாயகர் தெரிவானது ஐ.ம.சு.முன்னணியின் அரசியல் எதிர்காலத்தை மட்டுமல்ல, சனாதிபதி சந்திரிகாவின் அரசியல் எதிர்காலத்தையும் பாதிக்கத் தக்கதொன்றாக அமையத்தக்கதாகும். ஆகையினால் இச்சபாநாயகர் தெரிவில் ஆளும் கட்சியும், எதிர்க்கட்சியும் கடும் போட்டியில் குதித்தமை ஆச்சரியப்படக் கூடியதொன்றல்ல.

# தமது கட்சியைப் பிளவுபடுத்த ஐ.ம.சு.முன்னணி முயற்சிப்பதாக ஜாதிக ஹெல உறுமய கண்டனம்

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமய கட்சிக்குள் பிளவை ஏற்படுத்தும் வகையில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி திட்டமிட்டு செயற்படுகின்றது என்று கட்சியின் உயர் குழு உறுப்பினர் உடுவே தம்மாலோக தேரர் கூறியுள்ளார்.

இத்தகைய நடவடிக்கைகளினால் ஐ.ம.சு.மு நெருக்கடியான இக்காலகட்டத்தில் ஹெல உறுமயவின் ஆதரவை இழக்க நேரிடும் என்றும் அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

ஜாதிகஹெல உறுமயவைச் சேர்ந்த இருபாராளுமன்ற உறுப்பினர்கள் அண்மையில் காணாமல் போயிருந்ததாகவும் இவர்களை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரே கடத்திச்சென்றுள்ளதாகவும் இவர்களின் இந்த நடவடிக்கை காரணமாக எமது கட்சி ஐ.ம.சு.முன்னணி அரசிற்கு ஆதரவு வழங்குவதை மீளாய்வு செய்யப்போவதாக இக்கட்சியின் முக்கியஸ்தர் அறிவித்திருந்தது தெரிந்ததே.

இதேவேளை ஜாதிகஹெல உறுமய பாராளுமன்ற உறுப்பினர்கள் இருவர் நேற்று முன்தினம் இடம்பெற்ற சபாநாயகர் தெரிவில் ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரை ஆதரித்துவாக்களித்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

பாராளுமன்றத்துடன் ஜாதிக ஹெல உறுமய தொடர்பாக எவ்வாறான கருத்துக்கள் நிலவினாலும் எவருடனும் தமது உறுப்பினர்கள் நெருக்கடியான நிலையை ஏற்படுத்திக் கொள்ளமாட்டார்கள். இவ்வாறு ஜாதிக ஹெல உறுமய அதியுயர் பீடத்தின் தலைமை செயலாளர் உடுவே தம்மாலோக தேரர் கூறியுள்ளார்.

அதியுயர் பீடமான பாராளுமன்றத்தினுள் நடைமுறைக்கு ஒவ்வாத பல நிகழ்வுகள் நடைபெற்றுள்ளதாக செய்தியாளர்களிடம் அவர் கூறியுள்ளார்.

அத்துடன் ஹெல உறுமய சார்பில் பாராளுமன்றத்தில் கருத்துக்களை முன்வைக்க கம்பஹா மாவட்டத்திலிருந்து தெரிவான அபரெக்க பஞ்ஞாநந்த தேரர் எழுந்தபோது கட்சித் தலைவரே கருத்துக்களை முன்வைக்க முடியும் என்று சபாநாயகர் அறிவித்திருந்தார்.

ஆளும் கட்சியின் இடையூறுகளுக்கு மத்தியில் எல்லாவல மேதானந்த தேரர் கருத்துக்களை முன்வைக்கும் நிலை உருவானது.

இதனைப் பார்க்கும்போது, இதுவரை காலமும் பாராளுமன்றத்தில் நடந்தவற்றை ஊடகங்கள் மூலமே அறிந்துள்ளோம். இப்போது அவற்றை நேரில் பார்க்கும் சந்தர்ப்பம் கிடைத்தது.

இந்த நாடு எந்தளவு தூரம் அழிவுப் பாதைக்குச் சென்றுள்ளது என்பது பற்றி நாம் கலந்துரையாடியுள்ளோம். பாராளுமன்றத்தில் எமது உறுப்பினர்கள் பேசும்போது இடையூறு விளைவிக்கப்பட்டமை கவலைக்குரிய விடயம் என்றும் அவர் கூறியுள்ளார்.

# சபாநாயகர் தெரிவில் தோற்றாலும் விரைவில் மக்கள் சக்தியை வெளிப்படுத்துவோம்

### ஐ.ம.சு.முன்னணியின் பொதுச்செயலர்

(கொழும்பு)

சபாநாயகர் தெரிவில் தமது கட்சி தோல்வி அடைந்தாலும் கூட தமது கட்சிக்கு உள்ள மக்கள் சக்தியை விரைவில் வெளிப்படுத்தப் போவதாக ஐ.ம.சு.மு. பொதுச் செயலாளர் சுயித்பிரேம் ஜெயந்த கூறியுள்ளார்.

அரசாங்கம் அதிகாரத்தில் இருக்கும் வரை தாம் உறுதியளித்தவாறு மக்களுக்கான நிவாரணங்களைப் பெற்றுக் கொடுக்க விரைவில் நடவடிக்கை எடுப்பதாகவும்,

எதிர்கட்சிக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மை இருக்கின்றது என்று நிருபிக்கப்பட்டால் அதுபற்றி சனாதிபதி பரிசீலிப்பார் என்றும் பாராளுமன்றத்தில் எந்தவொரு கட்சிக்கும் பெரும் பான்மை இல்லை என்பதனால் பெரும்பான்மை பெற்ற ஐ.ம.சு.முன்னணி அரசாங்கமொன்றை அமைத்துள்ளது என்றும் நேற்றுமுன்தினம் ஊடகவியலாளர்களிடம் அவர் கூறியுள்ளார்.

# யாழ். போதனா வைத்தியசாலை அபிவிருத்திக்கு ஒதுக்கப்படும் நிதி கிடைப்பதில்லை

### வைத்தியசாலை நிர்வாகி கவலை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திகளுக்கென அரசினால் ஒதுக்கப்படும் நிதிஒதுக்கீடுகள் எதுவும் முழுமையாக தமக்கு வந்து சேர்வதில்லை என வைத்தியசாலையின் நிர்வாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

யாழ் மாவட்டத்தில் கடந்த காலத்தில் இடம்பெற்ற யுத்தப் பாதிப்புக்களாலும்,, வசதியீனங்களாலும் பாதிக்கப்பட்டுள்ள வைத்தியசாலையை புனரமைப்புச் செய்யவென பலமில்லியன் ரூபாவை அவசரபுனர்வாழ்வு திட்ட நிதி ஒதுக்கீடுகளின் கீழ் ஒதுக்கியுள்ளது.

எனினும் இவை எதுவும் தமக்கு முழுமையாக கிடைக்கப்பெறாமையால் வைத்தியசாலையில் அபிவிருத்திப்பணிகள் பாதிக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கும் அவர்கள் பேச்சளவில் தெரிவிக்கும் உறுதிமொழிகளை அரசாங்கம் நடைமுறைப்படுத்தவும் முன்வர வேண்டும் எனவும் கோரியுள்ளனர். (33)

# புங்குடுதீவு கடற்படை முகாம் மண் அணை மூலம் பலப்படுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். புங்குடுதீவில் உள்ள கடற்படை முகாமைச் சூழ பாரியளவிலான மண் அணை ஒன்றை நிறுவி தனது பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான முயற்சியில் படையினர் ஈடுபட்டுவருகின்றனர்.

கடந்த சில தினங்களாக தொடரும் இந்நடவடிக்கைகளின் போது புல்டோசர்கள் கொண்டு மேற்படி படைமுகாம்களைச்சூழ பாரியளவிலான மண்ணணை ஒன்றை நிறுவும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

அத்துடன் இம்முகாமைச்சூழ படையினர் புதிய புதிய காவலரண்களையும், முட்கம்பி வேலிகளையும் அமைத்துவருகின்றனர்.

மத்தறிறுத்தம் அழுவில் உள்ள காவப்பகுதியில் மக்கள் குடியிருப்புக்களை அண்மித்துள்ள மேற்படிமுகாமை படையினர் பெருமெடுப்பில் பலப்படுத்தி வருவது மக்கள் மத்தியில் பீதியை உருவாக்கியுள்ளது. (33)

# இந்திய வசமான மகளிர் ஆசிய கிண்ணம்

சிறிலங்கா இந்திய மகளிர் அணிகளுக்கிடையில் நடைபெற்ற 3ஆவது ஒரு நாள் போட்டியிலும் இந்திய அணி வெற்றி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிறிலங்கா அணி 39.3 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் 90 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி ஆடிய இந்திய அணி 24.4 ஓவரில் 4 விக்கெட்டுக்களையிழந்து வெற்றியிலக்கையடைந்தது.

இந்திய அணிக்கு இப்போட்டியில் 25 உதிரி ஓட்டங்கள் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் 5 போட்டிகள் கொண்ட இத்தொடரை இந்திய அணி கைப்பற்றிவிட்டது.

# வடக்குக் கிழக்கு இடைக்கால நிர்வாகசபை ஏற்படுத்த எமக்கு ஆணை கிடைத்துள்ளது

## தமிழரசுக் கட்சி பா.உ. இரா.சம்பந்தன்

(கொழும்பு)
வடக்குக் கிழக்கு இடைக்கால சுயாதீன நிர்வாகத்தை ஏற்படுத்துவதற்கான ஆணை தனது கட்சிக்கு கிடைத்துள்ளதாகத் தமிழரசுக்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சி ஹெல உறுமய, ஐ.தே.க. ஆகியன ஒன்றிணைந்து சபாநாயகர் தெரிவுப் போட்டியில் ஐ.ம.சு முன்னணி வேட்பாளரை தோற்கடித்து ஐக்கிய தேசியக்கட்சி வேட்பாளரை வெற்றி பெறச்செய்த பின்னர் அவருக்கு வாழ்த்துத் தெரிவிக்கும் வகையில் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றும் போதே இரா. சம்பந்தன் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் சுயநிர்ணய உரிமையைப் பெற்றுக் கொள்ளும் செயற்பாட்டில் சமாதான நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கு முகமாகவே கடந்த பொதுத் தேர்தலில் வடக்குக்கிழக்குப் பகுதி மக்கள் எமது கட்சிக்கு 95 வீதமான ஆணையை வழங்கியுள்ளார்கள்

இதேவேளை வடக்குக் கிழக்கு பகுதியில் எவருக்கும் அநீதி ஏற்படக் கூடாது என்ற கொள்கையில் எமது கட்சி உறுதியாக இருந்து வருகிறதெனவும் சம்பந்தன் மேலும் தெரிவித்துள்ளார். அத்துடன் தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு கட்சியினுடைய பிரதிநிதிக்கு தமிழ் மக்களுடன் சம்பந்தப்பட்ட பல முக்கியமான விடயங்கள் சம்பந்தமாக ஓர் அமைச்சர் பதவியைக் கொடுத்துள்ளமை தமிழ் மக்களுக்கு விதிக்கப்பட்ட அவமானமென நாங்கள் கருதுகின்றோம். இவ்வாறான காரணங்களினால் தான் நாங்கள் அரசாங்கத்திற்கு எதிராக வாக்களிக்க முடிவெடுத்தோம் எனவும் அவர் தெரிவித்தார்.

# துப்பாக்கிரவைகளுடன் கைதான இளைஞருக்கு விளக்கமறியல்

(மட்டக்களப்பு)
மட்டக்களப்பு மாவடி பிராதான வீதியில் வைத்து துப்பாக்கி ரவை கள்வைத்திருந்ததாகக் கைது செய்யப்பட்ட இளைஞர் ஒருவரை இரு வாரங்களுக்கு விளக்க மறியலில் வைக்குமாறு நீதவான் நீதிமன்ற நீதிபதி உத்தரவிட்டுள்ளார்.

பொலிசாரும் ராணுவத்தினரும் இணைந்து உரப்பையுடன் வந்த இளைஞரை சோதனையிட்ட போது மேற்படி துப்பாக்கி ரவைகள் கண்டுபிடிக்கப்பட்ட தாகவும் அதையடுத்து இளைஞன் கைது செய்யப்பட்டதாகவும் தெரி யவருகிறது.

காளிகோவில் வீதி மாவடியைச் சேர்ந்த பரசுராமன் நவரெத்தினம் என்பவரே கைது செய்யப்பட்டவராவார். மேற்படி இளைஞனை தீங்கு விளைவிக்கும் ஆயுதச்சட்டத்தின் கீழ் வழக்குத் தாக்கல் செய்த நீதவான் மே மாதம் 7ஆம் திகதி மன்றில் ஆஜர் செய்யுமாறு உத்தரவிட்டுள்ளார்.

## -மகாவலி அபிவிருத்திச்சபை உட்பட-

# அமைச்சுப் பொறுப்புக்களை மைத்திரிபாலசிறிசேன ஏற்றார்

(கொழும்பு)
மைத்திரி பால சிறிசேன நேற்று தமது அமைச்சுப்பதவியை பொறுப்பேற்றுள்ளார். ரஜரட்டை அபிவிருத்தி அமைச்சரான இவர் நேற்றைய தினம் கொழும்பு காலிவீதியில் அமைந்துள்ள அமைச்சரின் உத்தியோக பூர்வமாக தனது கடமையினை பொறுப்பேற்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த அமைச்சில்இலங்கை மகாவலி அபிவிருத்தி சபையும் அடங்குவதாகவும் அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார். இவ் அபிவிருத்திச் சபை தொடர்பாக ஜே.வி.பி.யுடன் இழுபறி ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதேவேளை ஆற்றுப் படுக்கை ரஜரட்டை அபிவிருத்திப் பிரதி அமைச்சர் களான சாலிந்த திஸாநாயக்க, பிரேமலால் ஜெயசேகர ஆகியோரும் தமது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர்.

# நால்வருக்கு காயம்

(மட்டக்களப்பு)
களுவங்கேணியில் எரிந்துகொண்டிருந்த மண்ணெண்ணெய் விளக்கு வெடித்துச்சிதறியதில் நால்வர் எரிகாயங்களுக்கு உள்ளாகி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவத்தின் போது எம்மகேந்திரன் (வயது45), மகேந்திரன் மஞ்சுளா (வயது 22),பாலேந்திரா (வயது12), அருளையா,பிரசாந் (வயது12) ஆகியோர் எரிகாயங் களுக்கு உள்ளாகியுள்ளனர். இவர் களில் ஒருவரின் நிலைகவலைக்கிடமாக வுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# மரண அச்சுறுத்தல் இருப்பதால் நீதிமன்றில் ஆஜராக முடியாது

## -டக்ளஸ் தேவானந்தா அறிவிப்பு

(கொழும்பு)
தமக்கு மரண அச்சுறுத்தல் இருப்பதால் தாம் களுத்துறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜராக முடியவில்லை என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா களுத்துறை நீதிமன்றத்திற்கு அறிவித்துள்ளார். இதனை நேற்று டக்ளசின் சட்டத்தரணி நீதிமன்றில் ஆரம்பித்த 1997ஆம் ஆண்டு களுத்துறை ஜாவத்த சிறைச்சாலையில் டக்ளஸ் தேவானந்தா தாக்கப்பட்டமை தொடர்பான வழக்கே களுத்துறை நீதிமன்றத்தில் நேற்று எடுத்துக் கொள்ளப்பட்டது. இதன்போது தகவல் அளித்த டக்ளசின் சட்டத்தரணி கொழும்பு மேல் முறையீட்டு நீதிமன்றத்தில் இந்த வழக்கின் விசாரணை நடக்குமானால் அதில் தனது தரப்புக்கள் ஆஜராக முடியும் எனவும் குறிப்பிட்டார். (32)

# பாராளு.நிலையியல் கட்டளைகள் சிலவற்றில் குறைபாடுகள்

## புதிய சபாநாயகர் லொக்குபண்டார தெரிவிப்பு

பாராளுமன்றத்தில் சில நிலையியற் கட்டளைகளில் குறைபாடுகள் இருப்பதாக புதிய சபாநாயகர் லொக்குபண்டார தெரிவித்துள்ளார். இதனால் இவ்நிலையியற் கட்டளைகளில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென அவர் மேலும் தெரிவித்துள்ளார். சபாநாயகர் லொக்குபண்டார தனது கடமைகளைப் பொறுப்பேற்ற பின்னர் அவர் இதனைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஜனதாச..
பத்திரிகையின் பொறுப்பினை ஏற்கவுள்ளார். என தகவல்கள் தெரிவிக்கின்றன. இவருக்குப் பதிலாக டாக்டர் ஜயம்பதி விக்கிரம ரட்ண அல்லது முன்னாள் பிரதமர் இரட்ணசிறிவிக்கிரம நாயக்க நியமிக்கப்படலாம் என கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

### அம்பாறை..
கமும் பலத்த சேதத்திற்கு உள்ளாகியதாக தெரிவிக்கப்படுகிறது.சம்பவம் தொடர்பாக சம்பாந்துறை பொலிசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

### வடமேல்..
அடைந்துள்ளதாகத் தெரிவித்துள்ளனர். இதேவேளை வடமேல் மாகாண சபைத் தேர்தல் முடிவுகள் இன்று இரவு பத்து மணிக்குப் பின்னர் வெளியாகுமெனத் தேர்தல் செயலகம் தெரிவித்துள் ளது.

அத்துடன் தபால் மூல வாக்குகள் இன்று மாலை நான்கு மும்ப திற்குப் பின்னர் எண்ணப்படுமெனவும், சகல பெறுபேறுகளும் மாவட்ட செயலகங்களூடாக அறிவிக்கப்படும். அதேவேளை இறுதிப் பெறுபேறு மட்டுமே கொழும்பு தேர்தல் செயலகத்தினால் வெளியிடப்படுமெனவும் தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

### அமைதி..
எழுத்து மூலம் அவர்களுக்கு அறிவிக்கப்பட்டன. அவை அனைத்துமே அமைதி வழிமுறை நன்கு செயற்படவேண்டும் என்பதற்கான விமர்சனங்கள். இவ்வாறு கூறியமை நோர்வே நாட்டின் ஒத்துழைப்பு தேவையில்லை என்றதல்ல. அமைதிப் பேச்சுவார்த்தைகள் தொடர அவர்களின் ஈடுபாடு அவசியம்.

கேள்வி:- சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு இந்தியாவின் ஈடுபாடு அதிகமாக இருக்க வேண்டுமெனப் பிரதமர் ராஜபக்ஷ கூறியிருந்தார். இந்தியாவை அழைக்கும் எண்ணம் ஏதாயினும் உங்களுக்கு உண்டா?

பதில்:- முன்பு இருந்த அரசு அமைதி வழிமுறையில் அனைத்துத் தரப்பினரையும் முழுமையாக ஈடுபடுத்தவில்லை. நட்புநாடு என்கின்ற வகையில் இந்தியாவின் ஈடுபாடு இதற்கு வேண்டுமென்பதே சனாதிபதியின் நோக்கம். எனவே ஒருநட்பு நாட்டை அழைத்தால் இன்னுமோர் நட்புநாட்டை அழைக்கவில்லையென கூறமுடியாது.

### நோர்வே...
பேச்சுவார்த்தைகளைத் தொடங்கப் போவதாகத் தெரிவித்திருந்தன. ஆயினும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியில் அங்கம் வகிக்கும் ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெலஉறுமய என்பன நோர்வேயின் மத்தியஸ்தத்தை நிராகரிக்கும்படி கோரிவருகின்றன.

சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கப்போவதாகக் கூறி வந்தபோதும் ஏனையகட்சிகளையும் பேச்சுக்களில் ஈடுபடுத்தப் போவதாகக் கூறிவருகின்றார்.

இந்நிலையில் சிறிலங்காவின் புதிய அரசினைப்பொறுப்பேற்றுள்ள சந்திரிகா குமாரதுங்க நேற்று முன்தினமிரவு தம்முடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இந்த வேண்டுகோளை விடுத்துள்ளதாகவும் நோர்வேப் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இது இவ்வாறிருக்க தமிழீழ விடுதலைப்புலிகளும் இதே மாதிரியான வேண்டுகோளை விடுக்கும் பட்சத்தில் உடனடியாக நோர்வே அரசு ஏற்பாட்டாளராகப் பணியாற்றத் தாம் தயார் என சனாதிபதிக்கு பதிலளித்ததாகவும் நோர்வேப் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

### தர்மராஜ்யம்..
றார். பாராளுமன்றத்திற்குத் தெரிவான பௌத்த பிக்குகளின் பௌத்த போதனைகளுக்காகவே மக்கள் அவர்களுக்கு வாக்களித்துள்ளனர். ஆறுவீதமான வாக்குகள் இவர்களுக்குக் கிடைத்துள்ளன. இவ் வாக்குகளை ரணில், பிரபாகரன்,ரவூப்ஹக்கீம், தொண்டமான் ஆகியோரின் தேவைகளுக்காக அர்ப்பணிப்புச் செய்துள்ளனர் என தெரிவித்துள்ளார். அத்துடன் தர்மராஜ்யம் எனக் கூறி இறுதியில் ரணிலைப் பகிரங்கமாக ஆதரித்துள்ள இச் சக்தியைத் தோற்கடிக்க வேண்டுமெனஅவர் சூளுரைத்துள்ளார்.

### இரு..
துரலிய ரத்னதேரர் ஊடகமாநாட்டில் தெரிவித்துள்ளார்.
அரசாங்கம் தமது பிக்குகள் இருவரை பணம் கொடுத்து வாங்கியமைக்கு எதிராகவே தம்மில் இருவர் ஐக்கியதேசியக் கட்சிக்கு வாக்களித்ததாக இவர் கூறினார். தாம் நேற்று முன்தினம் நாடாளுமன்றம் சென்று வந்ததும் குப்பைக்குள் இருந்து வந்த உணர்வை அடைந்ததாக அவர் கூறினார். கட்சிக்கு விரோதமாக செயற்பட்ட இரண்டு பிக்குமாருக்கும் எதிராகவே நீதிமன்றம் செல்லப்போவதாகவும் அவர் தெரிவித்தார். (32)

### பனையுடன்..
வேகமாக பயணித்த வேளை உந்துருளி கட்டுப்பாட்டை இழந்து பனையுடன் மோதியுள்ளது. உடனடியாக நபரை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அனுமதித்து சிகிச்சை அளித்தபோதும் சிகிச்சை பயனளிக்காத நிலையில் பரிதாபமாக பிற்பகல் 4.30 மணியளவில் உயிர் இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நடைபெற்ற இடத்தில் முன்னரும் விபத்து நடந்து ஒருவர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு.தீ)


## சான்றிதழ் வழங்கும் வைபவம்

**இடம்:- கிளி/கனகபுரம் ம.வி.**
**காலம்:- 27.04.2004 செவ்வாய்க்கிழமை**
**நேரம்:- பி.ப. 2.00 மணி**

கிளி/வலயக்கல்விப் பணிமனையின் முறைசாராக்கல்விப்பிரிவு -யூனிசெவ் நிறுவனத்தின் உதவியுடன் நடாத்திய

* கணனிப்பயிற்சி
* சுருக்கெழுத்து தட்டச்சு
* சிகை அலங்காரமும் ஒப்பனையும்
* பனம்பொருள் உற்பத்தி

ஆகிய பாடநெறிகளுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும். பயிற்சியை நிறைவு செய்த மாணவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளவும்.

ப.அரியரத்தினம்,
வலயக்கல்விப்பணிப்பாளர்,
கிளிநொச்சி.

(சி-9456)


## 31ஆம் நாள் நினைவஞ்சலி

தாயின் மடியில — ஆண்டவன் அடியில

1934 — 2004
08 — 03
25 — 27



அமரர்

## கந்தையா இராசையா

பாசமுடன் எமை ஈர்ந்து
நேசமுடன் அறிவெனும் அமுதூட்டி
பாசமுடன் வழிகாட்டி
நேசமுடன் வாழவைத்து
பாசமாய் சுற்றில் பிரிந்து சென்ற
நேசமுள்ள எம் தந்தையின் பிரிவால்
தினந்தோறும் வாடுகின்றோம்.

26 – 04 – 2004 அன்று எமது இல்லத்தில் எமது தந்தையின் இறுதிக் கிரியைகள் நடைபெற உள்ளதால் உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரையும் விருந்துபசாரத்தில் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

முகவரி:-
ஐயனார்புரம்,
வன்னேரிக்குளம்.

(4454)

தகவல்:-
மனைவி,பிள்ளைகள்,மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,பூட்டப்பிள்ளைகள்.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004 ஆண்டு ஏப்பிரல் மாதம் 24 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.